26.08.2025

O.S.No. 415/2021

PW1–பாலசுப்பிரமணியன் – த/பெ. சூடாமணித்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.08.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( 7 ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் சுப்பையாத்தேவரின் வாரிசு என்று சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுப்பையாத்தேவரின் தகப்பனார் பெயர் சண்முகத்தேவர். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சுப்பையாத்தேவரின் தகப்பனார் பெயர் சங்கரலிங்கத்தேவர் என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் காற்றாடி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டபின்பு அவ்வாறு உள்ளது. சுப்பையாத்தேவரின் தகப்பனார் பெயர் சண்முகத்தேவர் என்பதைக் காட்டக்கூடிய ஆவணம் எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன்.

2. சுப்பையாத்தேவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சுப்பையாத்தேவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பையாத்தேவரின் மகள் தான் செல்லத்தாய் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். சுப்பையாத்தேவரின் இறப்பிற்குபின்பு செல்லத்தாய் தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். செல்லத்தாயின் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை, ஆனால் அவரது அண்ணன் பெயரில் பட்டா இருந்தது. செலலத்தாய் இறந்தபிறகு அவரது கணவர் சூடாமணி, வாதிகளாகிய நாங்கள் அனுபவம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். சண்முகையாத்தேவரின்

மகன் தான் வேலுச்சாமி தேவர் என்றால் சரியல்ல. சண்முகையாத் தேவரின்மகன் தான் வேலுச்சாமி என்றும், அவரதுமகன் தான் முருகன் என்றால் சரியல்ல. அவர்கள் எனது பக்கத்து இடத்துக்காரர்கள்.

3. தாவா இடத்தில் சுப்யைாத்தேவரும், வேலுச்சாமித்தேவரும் சேர்ந்து சோலைத்தேவர் மகன் சுப்பையாவிற்கு 37 செண்ட் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது தாவா இடம் தொடர்பானதல்ல. சண்முகையாத்தேவர், முருகன், முத்தையாத்தேவர் ஆகிய மூவரும் சேர்ந்து பார்வதி என்பவருக்கு ஒரு பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

4. மேற்படி பார்வதியின் கணவர் பெயர் புலியூர்உடையான் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் கண்மணியாபுரம் தென்காசியில் குடியிருந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி புலியூர்உடையான் மனைவி பார்வதிதான் 1ம் தபசில் சொத்தை 7ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. தபசில் சொத்தில் 1 ஏக்கர் நிலத்தை 7ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

5. தபசில் சொத்தில் 2006ம் வருடம் மேலோரத்தில் காற்றாடி எனது இடத்திலும், அடுத்தவர் இடத்திலும் சேர்ந்து உள்ளது. மேற்படி காற்றாடியில் 2006 மார்ச் மாதத்தில் மின் உற்பத்தி துவங்கியது என்றால் சரிதான். காற்றாடி நிறுவிய விவரம் தெரியாது. அதனால் எந்த மறுப்பும்

அளிக்கவில்லை. காற்றாடி நிறுவிய விவரம் எப்படி தெரியாது என்றால் அது வானம் பார்த்தபூமி என்பதால் மழை பெய்தால் மட்டும்தான் விவசாயம் செய்வோம். மற்றபடி தரிசாகதான் இருக்கும். எங்களுக்கு காற்றாடி நிறுவிய விவரம் 2006 நவம்பர் மாத மழையில்தான் தெரியவந்தது. 2006 ம் ஆண்டு எந்த மறுப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 15 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2021 ம் ஆண்டே தாக்கல் செய்துவிட்டேன். எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. கொடிவழியை நாங்கள் எனது தாய்வழியாக தாக்கல் செய்தோம். கொடிவழி யார் தயாரித்தார்கள் என்றால் நான் சொல்லி வழக்கறிஞரால் எழுதப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஆவணம் பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. எனக்கோ, எனது பெற்றோருக்கோ தபசில் சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் ஒருபோதும் தபசில் சொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. எனவே எனக்கு பாகம்கோரும் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**7.குறுக்குவிசாரணை (4,5 பிரதிவாதிகள் தரப்பில்)**

என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இடம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.465/6, 1 ஏக்கர் 46 செண்ட் மற்றும் மற்றொரு சர்வே எண் ஞாபகம் இல்லை. 1 ஏக்கர் 46 செண்டில் 4 திசையிலும் யார் யார் இருக்கிறார்கள் என்றவிவரம் எனக்கு தெரியாது. அதைபோல் மற்றொரு சர்வே எண்ணுக்கு நான்கு

திசையில் உள்ளவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது. வாதிகளாகிய நாங்கள் ஐவரும் சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். எனது சகோதரியின் பெயர் வெள்ளத்துரைச்சி என்றால் சரிதான், துரைச்சி என்று யாரும் இல்லை. திருமணத்திற்குபிறகு எனது சகோதரியின் பெயர் துரைச்சியாக ஆகிவிட்டது.

8. நான் தற்போது கேரளாவில் வசித்துவருகிறேன் என்றால் சரிதான். மற்ற 4 பேர்களும் கூலிவேலைக்காக கேரளாவில்தான் இருக்கிறார்கள். 1,2 பிரதிவாதிகள் தாய்மாமாக்கள், 3 ம் பிரதிவாதி எனது சித்தி ஆவார். 4,5 பிரதிவாதிகள் யார் என்று தெரியாது. வழக்கறிஞர் ஆலோசனையின்பேரில் 4,5 பிரதிவாதிகளை கட்சியாக சேர்த்தேன். தாவா சொத்து ஆதியில் எனது தாத்தா (சுப்பையாத்தேவர்)வின் தகப்பனாருக்கு (சண்முகையாத்தேவர்) பாத்தியப்பட்டது. சண்முகையாத்தேவருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. சண்முகையாத்தேவர் தங்களது உடன்பிறந்தவர்களுடன் பாகம் செய்துகொண்டார்களா அல்லது பாகம் பிரித்துக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து சண்முகையாத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. "அ" பதிவேடு மற்றும் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். சுப்பையாத்தேவருடன் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 4 பேர். 2 ஆண், 1 பெண். அவர்களின் பெயர் சரியாக ஞாபகம் இல்லை. சுப்பையாத்தேவர் மற்றும் அவர் உடன்பிறந்தவர்களுடன் பாகப்பிரிவினை நடைபெற்றதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுப்பையாத்தேவருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதை

காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. "அ" பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நான் கொடுத்த ஆவணங்களின்படி தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் எனது பூட்டனார் சண்முகையாத்தேவர் பெயர் காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சுப்பையாத்தேவரின் தகப்பனார் பெயர் சங்கரலிங்கத்தேவர் என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் காற்றாடி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டபின்பு அவ்வாறு உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாத்தா பெயர் இருந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் எனது தாத்தா இறந்தபின்பு தவறு நடைபெற்றது. 2ம் பிரதிவாதி எனது தாத்தா இறந்தபின்பு தனது பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் சரிதான். எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய பிராதில் 1976ம் ஆண்டு எனது தாத்தா இறந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அப்பொழுதே 2ம் பிரதிவாதி தனது பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் சரிதான். அப்பொழுது நாங்கள் கேட்டதற்கு 2ம் பிரதிவாதி எங்களுக்கு தருவதாக உறுதியளித்ததால் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

10. சுப்பையாத்தேவருக்கு 2 ஆண், 2 பெண்வாரிசுகள். அதில் ஆண்வாரிசு 1,2 பிரதிவாதிகள், பெண் வாரிசு 3ம் பிரதிவாதி, மற்றொரு நபர் எனது தாய் என்றால் சரிதான். நான் எனது தாத்தாவின் மகள் செல்லத்தாய் வாரிசு என்ற அடிப்படையில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். எனது தாய்க்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து தாய் வழி சொத்து என கூறிதான் வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. எனது தாத்தாவின் இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த காலத்தில் எங்களுக்கு தெரியாது. எனது தாத்தாவின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோம். சுப்பையாத்தேவரின் மனைவி பெயர் ஈஸ்வரியம்மாள். ஈஸ்வரியம்மாளின் இறப்புசான்றிதழை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். எப்போது இறந்தார் என்ற தேதி ஞாபகம் இல்லை.

12. வா.சா.ஆ.8 ஆவணத்தில் கூறியுள்ளவாறு 28.06.2009 எனதுபாட்டி இறந்தார் என்றால் சரிதான். எனது பாட்டி இறப்புக்குபின்பும் அவரின் வாரிசுசான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் கொடிவழியை தாக்கல் செய்துள்ளேன். எனது தாய் 10.06.1998 ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாயின் பெயர், தந்தையின் பெயர் இல்லை என்றால் சரிதான். அதில் கணவர்பெயர் மட்டும்தான் இருக்கிறது என்றால் சரிதான். எனதுதாயின் வாரிசுசான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தஆண்டு எனது தாயருக்கு இறப்புசான்றிதழ் வாங்கினோம் என்று சொல்ல தெரியாது என்றால் சரிதான். எனது தந்தை 2010 ம் ஆண்டு இறந்தார். அவரின் இறப்புசான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

13. எனது தந்தை வாரிசுசான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் வாரிசு வாதிகள் தான் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டும் 2ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு தாவா சொத்தை தருகிறேன் என உறுதியளித்தார். நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் இணக்கமாக தான் உள்ளேன் என்றால் சரிதான். எனது தாய்க்கு திருமணத்தின்போது சீர், சீராட்டுகள் செய்துதிருமணம் செய்துவைத்தார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிதான் மூத்தவர் என்றால் சரிதான். இரண்டாவது வாதிகளின் தாயார், அதற்குபின் 3ம் பிரதிவாதி, அதற்குபின்னிட்டு 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் சுப்பையாத்தேவரின் வாரிசுகள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் உயிருடன் உள்ளார்கள், இருவருக்கும் திருமணம் ஆகவில்லை. 3ம் பிரதிவாதி திருமணமாகி உள்ளூரில் இருந்துவருகிறார். 1,2 பிரதிவாதிகளை பார்க்க ஆள் இல்லாத காரணத்தினால் 3ம் பிரதிவாதி அவர்களுடன் தான் இருந்துவருகிறார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஒரே முகவரியில்தான் வசித்துவந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபின்பு 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் சொன்னேன். அவர்கள் தாக்கல் செய்துகொள் என கூறினார்கள். 1974ம் ஆண்டே எனதுதாத்தா உயிருடன் இருந்தகாலத்தில் எனதுதாய், 3ம் பிரதிவாதிக்கு போதுமான சீர்கள் செய்ததால் எனது தாய், 3ம் பிரதிவாதி வாய்மொழியாக தங்களது பாகத்தை விடுதலை செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்நாள்வரை 3ம் பிரதிவாதி வீடு இல்லாமல் தான் உள்ளார். எனது தாத்தா உயிருடன் இருந்தகாலத்தில் தாவா சொத்தை

பாகம் பிரித்து 2ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார், அதன் அடிப்படையில்தான் அவருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

14. 2ம் பிரதிவாதி தனக்கு கிடைத்த பட்டாவின் அடிப்படையில் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அது எங்கள் பாகத்தை கட்டுப்படுத்தாது. ஆதியில் இருந்து மாமா பாகம் பிரித்துதருவதாக தான் சொல்லிவருகிறார் என்றால் சரிதான். 1998ம் ஆண்டே எனக்கு 2ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா உள்ளவிவரம் தெரியும்.

15. 2ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2ம் பிரதிவாதி விற்கவில்லை என்றுதான் கூறினார். எனக்கு வழக்கு தாக்கல் செய்யும்போதுதான் விவரம் தெரியும். 2ம் பிரதிவாதியிடம் நான் வழக்கு தாக்கல் செய்தபின்பு தெரிவித்தேன், அப்போதும் விற்கவில்லை என்றுதான் கூறினார். பணபலம் இல்லாத காரணத்தினால் நீதிமன்றத்தை அணுகவில்லை என கூறினார். நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டுசேர்ந்துகொண்டு 1976ல் விற்றவிவரம் தெரிந்தும், தற்போதுதான் தெரியவந்ததுபோல் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் நோக்கோடும், 4ம் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடும் வீணாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான கோரியுள்ள பரிகாரம் 2ம் தபசில் சொத்தை பொறுத்துமட்டும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/—K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.